அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 6/91

அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம் - கொழும்பு. 7
1991, பெப்ரவரி மாதம் 23ஆந் திகதி.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாணச் சபை ஆளுநர்களின் செயலாளர்களுக்கும்,
மாகாணச் சபைகளின் தலைமைச் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,
அரசாங்கதிபர்களுக்கும்.

சம்பளக் கடன்கள் - XXIV வது பந்தி
தாபன விதிக் கோவை.

11.2வது உபபிரிவில் உள்ளதை அகற்றி அதன் பொருட்டு கீழ்வருபவற்றை உள்ளடக்கவும்.

"11.2 கடன் தொகை 11.13.8வது பிரிவுக்கும் 11.2.1 மற்றும் 11.2.2 உபபிரிவுகளுக்கும் அமைய கடன் தொகை உத்தியோகத்தரின் இரண்டு வருட வேதனத்துக்கு விஞ்சுதலாகாது."

02. 11.2.1 உபபிரிவுகளுக்குப் பின் கீழ்வரும் புதிய உபபிரிவுகளை சேர்க்கவும்.

"11.2.2 காணி அல்லது வீட்டு ஆதனம் தொடர்பாக ஒரு கடனை அறவிடுவதற்கான தவணைப்பணத்தை உபபிரிவு 3.5இல் காட்டப்படும் அறவீட்டு எல்லைகளுள் வைத்துக் கொள்ள முடியாத சந்தர்ப்பங்களில், மாதாந்த கடன் அறவீட்டு தவணைப்பணத்தை அவ்வெல்லைகளுள் வைத்துக் கொள்ளக் கூடிய கடன் தொகையை அமைச்சின் செயலாளரால் அனுமதிக்க முடியும்."

03. 3.5.1 உபபரிவினை அகற்றி அதன் பொருட்டு கீழ் வருபவற்றை உள்ளடக்கவும்.

"3.5 காணி அல்லது வீட்டு ஆதனமொன்றை கொள்வனவு செய்யும் உத்தியோகத்தரொருவர் சம்பந்தமாக உச்ச அறவீடுகள் மாதாந்த சம்பளத்தின் 50%த்துக்கு எல்லைப்படுத்தப்படல் வேண்டும். இவ்வெல்லையை விஞ்சும் விதத்தில் கடன் தொகைகள் வழங்கப்படலாகாது. எவ்வாறு இருப்பினும் 11.2.2 உபபிரிவின் கீழ் கடன் தொகை வழங்குவது சம்பந்தமா அமைச்சின் செயலாளருக்கு தீர்மானம் எடுக்க முடியாது."

04. 3.8 உபபிரிவினை அகற்றி அதன் பொருட்டு கீழ்வருபவற்றை உள்ளடக்கவும்

"3.8 (விழா முற்பணங்கள், காணி அல்லது வீட்டு ஆதனம் தவிர்ந்த) எல்லா கடன் பொருட்டான நூற்றுக்கு 7.2%மாக இருத்தல் வேண்டும். மாதாந்தம் தவணைப் பணங்களை அறவிடுதல் வேண்டும். காணி அல்லது வீட் ஆதனங்களின் பொருட்டு வட்டி வீதம் நூற்றுக்கு 12%மாக இருத்தல் வேண்டும்."

05. திறைசேரியின் உடன்பாட்டுடன் இச்சுற்று நிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

ஒப்பம்: ஆர். அபேரத்ன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,